இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -21 வெற்றி -06

# நேர்மை நெறி

ஜுன் 2023

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

## (NERMAI NERI)

(Reg.No.349/2001)

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்

₹ 10

# சமுதாயத்தில்ஏற்றதாழ்வுகளை விரிவுபடுத்தும்ஊழல்தேவையா?



## ஊழல் நம் நாட்டின் சாபம்

**PUBLISHED BY**

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாபுரம், சென்னை-600023
தொலைபேசி எண்: 044 2674 1007
e-mail : acmchennai2001@yahoo.co.in
website : anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே அனைவருக்கும் அன்பார்ந்த வணக்கம்.**

நமது இயக்கத்தின் நிறுவனர்களும் மறைந்த முன்னாள் தலவர்களுமான
**1 ஐயா குப்புராஜா அவர்கள்**
**2 ஐயா பொண்ணுலிங்கம் அவர்கள்**
**3 ஐயா S M அரசு அவர்கள் இவர்கள் மூவருக்கும் இறை வணக்கம் செய்கிறேன்**..

இவர்கள் மூவரும் தலைவர்களாக இருந்த காலங்களில் சில நிகழ்வுகள் எனது நினைவில் நீங்காதவையாக உள்ளது. இதில் முதல் தலைவர் காலத்தில் நடந்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்து பார்க்கிறேன். எதுவாக இருந்தாலும் பழமைக்கு நிகர் இல்லை; இதனைக் கூறும்போது எனக்கு சரியான சொல் கிடைக்கவில்லை. ஐயா தலைவர் குப்புராஜா அவர்கள் குரல் எவ்வாறு, என்னவாக இருக்கும் என்பது இயக்கத்தின் பழைய உறுப்பினர்களுக்குத் தெரியும். அந்த குரலின் எதிரொலி இன்றும் இக்கணமும் என் மனதில் நீங்காதவைகளாக உள்ளது.

நமது இயக்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுடன் (EC Members) அனபார்ந்த வேண்டுகோள் வைக்கிறேன். தயவுசெய்து EC உறுப்பினர்கள் அவரவர்களின் பொறுப்புக்களை உணர்ந்து செயல் படுங்கள். அதன் பிறகு கருத்துக்கள்/ ஆலோசனைகளை வழ்ங்கலாம். சர்சைக்குரியவை எதுவும் செயற்குழுக் கூட்டத்தில் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன் அதற்காக கருத்துக்கள் ஏதும் தெரிவிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை வரம்பு மீறல், உரிமை மீறல்கள் வேண்டாம் என்றுதான் சொல்கிறேன்.

மீண்டும் ஒரு முறை நினைவூட்டுகிறேன். இயக்கத்தின் செயல்பாடுகள் மிகவும் தொய்வாக உள்ளது.

தமிழகம் எங்கும் அரசு இயந்திரங்கள் லஞ்சம் இன்றி இயங்கவில்லை. கிராம பஞ்சாயத்தில்/ பெருநகராட்சி/ மாநகராட்சிகளில் ஒப்பந்த தொழிலாளர்களாக சேவை செய்யும் துப்பரவு தொழிலாளர்கள், எவராலும் செய்ய முடியாத சேவைகளை செய்கிறார்கள். அதாவது, வீடுகளில் இருந்து எல்லாவித அசுத்தமான குப்பைகளை எல்லாம் பார்க்க நேரிடுகிறது . குழந்தைகள் கழிவு, பெண்கள் மாதவிடாய் பேடு இவைகளை எல்லாம் எடுத்துச் செல்பவரும் ஒரு மனிதர்தானே! இந்த வேலைக்கும் லஞ்சமா ? சற்று சிந்தித்துப் பாருங்கள் இந்த தொழிலாளிகளை ஏன் அரசு ஊழியர்களாக பணியில் அமர்த்தி அவர்களுக்கு வழங்கவேண்டிய சலுகைகளை ஏன் வழங்குவதில்லை?

நமது நாட்டில் அதிகாரவர்க்கம் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறது என்று பார்த்துக்கொள்ளுங்கள்! இந்த லஞ்சம் கிராமப்புறங்களில் மகாத்மா காந்தி 100 நாள் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் வேலை செய்யும் சாதாரண தொழிலாளிடம் கூட விட்டுவைக்கவில்லை அதன் சட்ட திட்டங்களுக்கு மாறாக செய்யல்படுபவர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலர் மற்றும் துணை ஒன்றிய அலுவலர் ஓவர்சியர் இவர்கள் ஊரகப் பணி அமைப்பாளர் மூலமாக லஞ்சம் பெறுகிறார்கள் இதிலும் ஊழல் நடைபெறுகிறது. இதில் சில மாவட்டங்களில் நமது ஊழல் எதிர்ப்பு இயக்கம் இருக்கிறது. இருந்தும் இந்நாள் வரை எதுவும் செய்ததில்லை. இது நமது இல்லாமையையே காட்டுகிறது.

மீண்டும் ஒரு முறை நினைவூட்டுகிறேன். நேர்மை நெறியில் உறுப்பினர் சேர்க்கையில் கவனம் தேவை என்று ஏப்ரல் மாத நேர்மை நெறி இதழில் எழுதியிருந்தேன்.ஏனென்றால் நமது இயக்கத்தில் சேர்ந்த பிறகு **Identity Card** அப்படி இருக்கவேண்டும் இப்படி இருக்கவேண்டும் என்று மட்டுமே கருத்து கூறுகிறார்களே தவிர, நமது இயக்கத்தின் வாயிலாக ஊழல் சம்பந்தப்பட்ட புகார்கள் எதுவும் செய்யவில்லை.

உண்மை ,நேர்மை, தர்மம் ஒரு போதும் தோற்காது..

தலைவர்
V அய்யப்பன்

## செயற்குழுக் கூட்டம் (20-05-2023)-

இன்று நமது இயக்கப் பொதுச் செயலாளர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், நான்கு செயற்குழு உறுப்பினர்களும், ஏழு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஏப்ரல் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. உச்ச நீதிமன்றத்தில், அமைச்சர் செந்தில் பாலாஜி மீது நாம் தொடுத்த வழக்கு வெற்றியடைந்தமைக்கு நமது சட்ட ஆலோசகர் திரு ந சுப்ரமணியன் அவர்களுக்கு இக்குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. உச்ச நீதிமன்ற உத்தரவின் படி தமிழக அரசு அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான விசாரணையை ஒழுங்காக நடத்தும் என எதிர்பார்க்கிறோம்

3. கீழ்க்கண்ட 12 பேர் நமது இயக்கத்தின் ஆண்டு/ (ஆயுள்) உறுப்பினராக விண்ணப்பித்துள்ளனர்.

i. திரு M சுப்ரமணியன்
ii. திரு D இளவரசன்
iii. திரு V குமர குருபரன்
iv. திரு E சேகர்
v. திரு K திருவரசன்
vi. திரு P பூமாலை
vii. திரு N அஸ்வின் ராஜ்
viii. திரு P ராம கிருஷ்னன்
ix. திரு A பெருமாள்
x. திரு G துளசிநாதன்

xi. திரு A தசரதன் (ஆயுள்)
xii. திரு K ஆனந்தன் (ஆயுள்)

எல்லா விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு/ஆயுள் உறுப்பினராகிறார்கள்.

4. நமது இயக்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் இவ்வருடம் ஜூன் அல்லது ஜுலை மாதம் நடத்தப்பட வேண்டும். இவ்வருடம் ஏதேனும் ஒரு மாவட்டம் அல்லது கிளைகள் பொதுக்குழுவை நடத்த விரும்பினால், அதன் தலைவர் விருப்பம் தெரிவிக்கக் கோருகிறோம். அவற்றை அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும். எந்த ஒரு மாவட்டமும் விருப்பம் தெரிவிக்கவில்லை என்றால் பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெறும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5. புதிய செயலாளர்களாக திரு D நாகராஜன் ,பயிற்சி செயலாளராகவும், திரு A ரவிக் குமார் , மக்கள் தொடர்பு செயலாளராகவும் தீர்மனம் நிறைவேற்றப்பட்டது

6. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

| ஒப்பம் | ஒப்பம் |
|---|---|
| வெ ஐயப்பன்<br>உப தலைவர் | வே கார்த்திகை ராஜன்<br>பொது செயலாளர் |

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

| | | |
|---|---|---|
| திரு வெ அய்யப்பன், | தலைவர் | : 75501 82438 |
| திரு V கார்த்திகை ராஜன், | பொதுச்செயலாளர் | : 87783 12823 |
| திருமதி பாக்யலட்சுமி, | மேலாளர் | : 90031 25142 |

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

# காந்தி என்றொரு எளிமையான கோட்டோவியம்!

வே. கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

காந்தியின் உருவத்தை என்றாவது வரைந்துபார்த்திருக்கிறீர்களா? உங்களுக்கு ஓவியம் வரையத் தெரியவில்லை என்றாலும் எளிமையான இந்தக் கோட்டோவியத்தை முயன்றுபாருங்கள்! ஒரு முட்டை, அதன் இரு பக்கங்களிலும் சற்றே ‘வி’ வடிவத்தில் விரிந்த காதுகள். சற்று விடைத்தது போன்ற மூக்கு, முக்கியமாக ஒரு மூக்குக்கண்ணாடி, அப்புறம் பொக்கை வாய்... என்ன மூச்சு முட்டுகிறதா? இதுவே சிரமமாக இருக்கிறதா? சரி விடுங்கள். உங்களுக்கு காந்தி படம் வரைய வேண்டும் அவ்வளவுதானே! அந்தக் கால பாணியில் ஒரு மூக்குக் கண்ணாடியை வரையுங்கள் போதும். உங்களுக்கு காந்தி கிடைத்துவிடுவார். ரூபாய் நோட்டுக்களிலும், ‘தூய்மை இந்தியா’ திட்டத்தின் விளம்பரங்களிலும் காந்தியை உருவகப்படுத்தும் கண்ணாடியைப் பார்த்திருக்கிறோம் அல்லவா! அதுபோல்.

எளிமையான ஒரு கண்ணாடி இங்கு காந்தியை உருவகப்படுத்துகிறது. வளைந்த ஒரு கைத்தடியை மட்டும் வரைந்தால் பெரியார் என்று கண்டுகொள்வோமல்லவா! காந்தியையும் பெரியாரையும் அறிந்திராதவர்களுக்கு அவை வெறும் கண்ணாடியும் கைத்தடியும் மட்டுமே. நமக்கு மட்டும் இந்தப் பொருட்கள் காந்தியாகவும் பெரியாராகவும் பொருள்படுகின்றனவே? ஏனென்றால் அந்தப் பொருட்களைப் பயன்படுத்திய மனிதர்களின் சித்தாந்தங்களை அந்தப் பொருட்களின் மீது நாம் ஏற்றிப்பார்க்கிறோம். இவ்வாறாக, அவை குறிப்பிட்ட அரசியல் செயல்பாடுகளின் சின்னங்களாக ஆகிவிடுகின்றன. அப்படித்தான் காந்தி தன் அரசியல் செயல்பாடுகளின் சின்னமாகத் தன் எளிமையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்.

### மாறுவேடப் போட்டிகளுக்கு உதவுபவர்

காந்தியின் உடுத்தல் பாணி எவ்வளவு எளிது என்பதை யாருக்கும் சொல்லத் தேவையில்லை. இதற்கு ஓர் உதாரணம். சமீபத்தில், எல்.கே.ஜி. படிக்கும் எனது மகனின் பள்ளியில் குடியரசு தினத்தைக் கொண்டாடும் விதமாக, தலைவர்கள் வேடத்தில் குழந்தைகளை அழைத்துவரச் சொல்லியிருந்தார்கள். பாரதியார் வேடத்துக்கு கோட்டு, தலைப்பாகை வேண்டும், நேதாஜி வேடத்துக்கு ராணுவ உடை வேண்டும்! ஆனால், ஒரு வெள்ளைத் துண்டை அரையாடையாகக் கட்டிவிட்டு, மேலே சட்டையில்லாமல் ஒரு சிறிய துண்டை சால்வை போல் போர்த்திவிட்டதில் காந்திஜி. கிடைத்தார். இன்ஸ்டண்ட் நூடுல்ஸ்போல் இன்ஸ்டண்ட் காந்தி தயார்! பள்ளிக்குச் சென்று பார்த்தால் பாரதி, நேதாஜி, நேரு, எல்லாரும் இருக்கிறார்கள். அவர்களின் தலைவரை நாங்கள் கொண்டுவந்தோம். ஆக, மாறுவேடப் போட்டிக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பும் பெற்றோருக்குத்தான் தெரியும் காந்தியின் உடுத்தல் பாணி எவ்வளவு எளிமை என்று!

இதனால் மற்ற தலைவர்களின் ஆடைகளையோ தோற்றத்தையோ குறை சொல்லவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு தோற்றம்; அதன் பின்னே ஒரு அரசியல் நிலைப்பாடு இருக்கும். பெரும்பாலான ஏழைகள் கோவணம் கட்டிக்கொண்டிருக்கத் தனக்கேன் சீமான் உடை என்று அதைத் துறந்தது காந்தியின் அரசியல் நிலைப்பாடு. ஆனால், வசதிகளும் வாய்ப்பும் மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனத்திலிருந்து வந்து இந்தியாவின் பெரும் மேதைகளுள் ஒருவராகவும் புரட்சியாளராகவும் உருவான அம்பேத்கரோ கோட்டும் சூட்டும் அணிந்தது அரையாடை உடுத்தியிருக்கும் சக இந்தியர்களை மிடுக்கான, நவீனத் தோற்றத்துக்கு உயர்த்தும் ஒரு செயல்பாட்டின் அடையாளம். இரண்டு செயல்பாடுகளும் மாறுபட்டவை போலத் தோன்றினாலும், அவற்றின் நோக்கம் ஒன்றே! சக மனிதர்களின் நிலை மேல் உள்ள அக்கறை!

### அரசியல், ஆன்மிகச் செயல்பாடு

காந்தியின் தோற்றத்திலுள்ள எளிமையே எல்லோரையும் ஈர்க்கும் முதல் காரணி. இந்தியர்களுக்குப் பொதுவாகத் துறவிகள் மேல் ஒரு ஈர்ப்பு உண்டு. துறவிகள், ஆன்மிகவாதிகள் என்பதனால் மட்டுமல்ல அந்த ஈர்ப்பு. எல்லாவற்றையும் துறந்துவிட்டு எளிமையாக வாழும் அவர்கள் வாழ்க்கை மீது ஏற்படும் ஈர்ப்பு என்றும் கூட அதைச் சொல்லலாம். அதைப் போல மிகவும் வசதி படைத்தவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் ரொம்பவும் எளிமையாகக் காட்சியளித்தால் மக்கள் மத்தியில் அவர்களுக்கு ஒரு மரியாதை ஏற்பட்டுவிடும். ‘எவ்வளவு பெரிய பணக்காரர், அவர் போய் பேருந்தில் வருகிறாரே?’, ‘ஒரு மாநிலத்தின் முதல்வர் இவர். அவர் டி.வி.எஸ். ஃபிஃப்டியில் வருகிறாரே?’ என்றெல்லாம் மக்கள் ஒரு சிலரை வியந்ததுண்டு. அவர்கள் ஊழல் செய்பவர்களா, வரிகட்டாதவர்களா என்பதெல்லாம் இரண்டாம் பட்சம். தோற்றத்தின் எளிமையே அவர்களுக்கு ஒரு செல்வாக்கை

ஏற்படுத்திவிடுகிறது. ஆனால், தோற்றத்தின் எளிமை ஏற்படுத்தும் ஈர்ப்பைத் தக்க வைக்கும் வாழ்க்கையை எல்லோரும் வாழ்கிறார்களா என்று சொல்ல முடியாது. காந்தியோ உண்மையைக் கொண்டு அந்தத் எளிமையை வலுவாக்கினார். அதுவே அவரது நீடித்த செல்வாக்குக்குக் காரணம். காந்தியின் எளிமை மற்றவர்களுடையது போலல்ல, அது உள்ளும் புறமும் காணப்படும் எளிமை. தன்னை மிக மிக எளியவராகக் கருதிக்கொண்டதனால் ஏற்பட்ட எளிமை. ஒரே சமயத்தில் அரசியல் செயல்பாடாகவும் ஆன்மிகச் செயல்பாடாகவும் அமைந்த எளிமை அது.

**'அரையாடைப் பக்கிரி'யும் மாமன்னரும்**

உலகெங்கும் பல நாடுகளில் மன்னராட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த காலம் அது. மக்களாட்சி தத்துவம் மிக மிக மெதுவாகவே அரும்புவிட்டுக்கொண்டிருந்தது. மன்னர்கள்தான் கடவுளர்களாகவும் மக்கள் அவர்களது அடிமைகளாகவும் நடத்தப்பட்டிருந்த நிலையிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியும் விடுபட்டிருக்கவில்லை. அந்தச் சூழலில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு எளிய மனிதர், 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று அந்நாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்ட்டன் சர்ச்சிலால் இகழப்பட்ட ஒருவர், அதே அரை நிர்வாணக் கோலத்துடன் இங்கிலாந்தின் மன்னர் ஐந்தாம் ஜார்ஜை நேருக்கு நேராக அவரது அரண்மனையில் போய்ச் சந்தித்தது எளிமையின் ஒப்பற்ற அரசியல் செயல்பாடில்லாமல் வேறென்ன? வின்ஸ்ட்டன் சர்ச்சில் காந்தியைப் பற்றிச் சொன்னது, இந்தியாவில் காந்தி தலைமையிலான சுதந்திரப் போராட்டம் தனது அரசாண்மையைக் கேள்விகேட்டது போன்றவற்றால் காந்தியைச் சந்திப்பதைச் சற்றும் விரும்பாமல்தான் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் இருந்தார். ஆனால், அரசியல் காரணங்களால் காந்தியை சந்தித்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு. அந்தச் சந்திப்பு குறித்துப் பத்திரிகையாளர்கள் காந்தியின் கேள்விகள் கேட்டனர். 'இப்படி அரையாடையுடன் மன்னரைப் போய்ச் சந்திப்பதில் உங்களுக்குத் தயக்கமில்லையா?' என்று ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு காந்தி சிரித்துக்கொண்டே, 'எனக்கும் சேர்த்துதான் மன்னரே உடையணிந்திருந்தாரே?' என்று கேட்டார்.

**செலவு வைக்கும் எளிமையா?**

தோற்றத்தில் மட்டுமல்ல, வாழ்க்கை முறையிலும் அவர் அதே எளிமையைக் கடைப்பிடித்தார். அவர் அறையில் அநேகமாக எந்த அறைக்கலனும் இருக்காது. சுவரில் ஒரு ஏசு படம் தொங்கிக்கொண்டிருக்கும் அவ்வளவுதான். உடைமையும் அதிகம் கிடையாது. தனக்கென்று ஏதும் சேர்த்துவைப்பது பாவம் என்று கருதினார். ரயில்களிலும் கப்பல்களிலும் மூன்றாம் வகுப்பிலேயே பயணித்தார். ரயில் பயணங்களின் போது காந்தியின் பாதுகாப்புக்காக அவருக்குத் தெரியாமல் ஒரு பெட்டி முழுவதிலும் காங்கிரஸ் தொண்டர்களுக்கு டிக்கெட் எடுத்துக் கொடுத்து கட்சி அனுப்பும். இதனால்தான், 'உங்கள் எளிமைக்கு நிறைய செலவாகிறது காந்திஜி' என்று சரோஜினி நாயுடு போன்றவர்கள் காந்தியைக் கேலி செய்வார்கள். ஆரம்பத்தில் நகைச்சுவைக்காகப் சொல்லப்பட்ட இந்த விஷயமே பிற்பாடு அவர் மீது அவதூறு செய்வதற்கான விஷயங்களுள் ஒன்றாக ஆகிப்போனது. காந்தியின் இயல்பே மூன்றாம் வகுப்பு எளிமைதான் என்றாலும் மூன்றாம் வகுப்பில் சென்றால்தான் ஏழை எளிய மக்களோடு மக்களாக இருந்து அவர்களின் வாழ்க்கைச் சிரமங்களை அறிந்துகொள்ள முடியும் என்பதும் கூட ஒரு நோக்கம்! கூடவே, தான் மூன்றாம் வகுப்பில் செல்வதன் மூலம் தனது செல்வந்தத் தொண்டர்கள் லட்சக் கணக்கானோரையும் அப்படிச் செல்ல வைத்தது, கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவரது எளிமைக்குக் கிடைத்த மகத்தான வெற்றி!

காந்தி காலத்திலும் சரி அதற்குப் பிறகும் சரி லட்சக் கணக்கான செல்வந்த காந்தியர்கள் தங்கள் சொத்துசுகங்களை உதறிவிட்டு காந்தியைப் போலவே எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டிருக்கின்றனர். காந்தியின் தொண்டர்களிடம் மட்டுமல்ல, அவரிடமிருந்து மாறுபட்ட கருத்தியல் கொண்டவர்களிடமும் அவரது எளிமை ஆதிக்கம் செலுத்தியிருப்பதற்கு கம்யூனிஸ்ட் தலைவர்கள் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், ஜீவா தொடங்கி இன்றைய நல்லகண்ணு வரை உதாரணம் காட்டலாம். வண்ணத்துப்பூச்சி விளைவுபோல இது காந்தி விளைவு!


<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**

**Savings A/C No: 000901000041657**

## டி.ஆர் இலாகா மாற்றம், ஆடியோ விவகாரத்தை உண்மையென நிரூபிக்கிறதா?!' - விமர்சனமும் திமுக பதிலும்!

லெ.ராம் சங்கர்( Vikatan 12 May 2023)

``அமைச்சரவை மாற்றம் என்பது முழுக்க முழுக்க முதலமைச்சரின் பிரத்யேக உரிமை. அமைச்சரவை, இலாகா மாற்றம் தமிழக நலன் மற்றும் வளர்ச்சியை மையப்படுத்தியதே தவிர எந்த அரசியல் காரணங்களுக்கும் இடமில்லை" என்கிறார்கள் தி.மு.க-வினர். தமிழக அமைச்சரவையில் மாற்றங்கள் நிகழ்ந்து தகவல் தொழில்நுட்ப அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன். அமைச்சரவைக்குள் புதிதாகத் தொழில்துறை அமைச்சராக என்ட்ரி கொடுத்திருக்கிறார் டி.ஆர்.பி.ராஜா. புதிய நிதியமைச்சராக நியமனமாகியிருக்கிறார் தங்கம் தென்னரசு. அமைச்சரவை மாற்றம் ஒரு பக்கம் இருந்தாலும் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜனிடமிருந்து நிதித்துறை பறிக்கப்பட்டிருப்பதுதான் தமிழக அரசியலின் ஹாட் டாப்பிக்






**அமைச்சரவை மாற்றம் பழனிவேல் தியாகராஜன் டி .ஆர்.பி.ராஜா -நாசர்**

பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பேசியதாக வெளியான ஆடியோவில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகனான அமைச்சர் உதயநிதியும், மருமகனான சபரீசனும் 30,000 கோடி ரூபாய் சேர்த்துவிட்டனர் என்று கூறுவதுபோல் இடம்பெற்றிருக்கிறது. தொடர்ச்சியாகப் பல நாள்களுக்கு இந்த விவகாரம் பற்றி எரிந்த நிலையில், அமைச்சரவை மாற்றம் தொடர்பாகவும் நிதியமைச்சர் பி.டி.ஆரின் துறை மாற்றம் செய்யப்படலாம் என்ற தகவல்கள் கசிந்தன. ஒருவேளை பி.டி.ஆர் நிதியமைச்சர் பதவியிலிருந்து மாற்றப்பட்டால் அவர் சொன்ன குற்றச்சாட்டுகள் உண்மையாகிவிடாதா என்ற கேள்விகள் தி.மு.க சீனியர்கள் மத்தியில் எழுந்துவந்த நிலையில் தகவல் தொழில்நுட்ப அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார் பி.டி.ஆர். அவர் வசமிருந்த நிதித்துறை தற்போது தங்கம் தென்னரசுவிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

### லிஸ்ட்டில் இருந்தவர்களில் நாசர் மட்டும் `டிக்'- அமைச்சரவை மாற்றத்தில் `எஸ்கேப்' ஆனவர்கள் யார் யார்?!

நம்மிடம் பேசிய அரசியல் பார்வையாளர்கள், "வெறும் வாய்க்கு அவல் கொடுத்த கதையாகிவிடும் பி.டி.ஆர் இலாகா மாற்றம். வருவாய்ப் பற்றாக்குறை 62,000 கோடி ரூபாயிலிருந்து 30,000 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டதற்கு பாராட்டு மழை பொழிந்த நிலையிலும் அவர் மாற்றப்பட்டிருப்பது பெரும் விமர்சனங்களுக்கே வழிவகுக்கிறது. இலாகா மாற்றத்தை வைத்து ஆடியோ விவகாரம் உண்மை என எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்யத் தொடங்கிவிடுவார்கள்" என்கிறார்கள்.

``சமீபத்தில் பி.டி.ஆர் ஆடியோ சர்ச்சையைக் கிளம்பியது. அதில் உதயநிதியும் சபரீசனும் 30,000 கோடி சம்பாதித்ருப்பதாக குற்றம்சாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து தற்போது பழனிவேல் தியாகராஜனை நிதித்துறை அமைச்சர் பொறுப்பிலிருந்து மாற்றியிருக்கின்றனர். இதன் மூலம் இந்த ஆடியோ விவகாரம் மேலும் உண்மையாகிறது" என்கிறார் அ.தி.மு.க செய்தி தொடர்பாளர் வைகைச் செல்வன்.

தொடர்ந்து பேசிய அவர் "தி.மு.க ஆட்சியில் நிதித்துறை செயல்பாடுகள் முறையாக இல்லை, பல்வேறு மக்கள் நலப்பணிகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள்

எழுந்துவருகின்றன. ஆகவே, நிதித்துறை எப்படி செயல்படப் போகிறது என ஆயிரம் கேள்விகளும் இருக்கின்றன.

தொழில்துறை அமைச்சராக டி.ஆர்.பி.ராஜா பொறுப்பேற்றிருக்கிறார். குடும்ப அரசியலுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. மேலும் தி.மு.க-வின் இரண்டாண்டுக்கால ஆட்சி வேதனை ஆட்சி. அதன்மீதான விமர்சனங்களை மறைத்திடவே இந்த அமைச்சரவை மாற்றம் என அ.தி.மு.க கருதுகிறது. மேலும், புகார்கள் அதிகம். எழுந்திருப்பதால் நாசர் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அமைச்சரவையில் வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாமியர்களின் பாதுகாவலர் எனப் பேசிவரும் தி.மு.க, இன்னொரு இஸ்லாமியச் சமூகத்தைச் சார்ந்தவரை அமைச்சராக நியமித்திருக்க வேண்டும்" எனக் கொதிக்கிறார் வைகைச் செல்வன்

இது குறித்துப் பேசிய பா.ஜ.க பிரமுகர்கள், "பி.டி.ஆரின் இரண்டு ஆடியோக்கள் வெளியானதே இந்த அமைச்சரவை மாற்றத்துக்குக் காரணம். தி.மு.க-வினரும் பி.டி.ஆரும் ஆடியோ பொய் என்றுதான் சொல்வார்கள். அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமா... குறைந்தபட்சம் தடயவியல்துறை மூலமாகவாவது பொய் என நிரூபிக்கட்டுமே, ஆடியோ விவகாரத்தால்தான் நிதியமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜன் பதவியிறக்கப்பட்டிருப்பதாகவே பார்க்கிறோம்" என்கிறார்கள்

இது குறித்து விளக்கம் கேட்க தி.மு.க செய்தித் தொடர்புச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரனிடம் பேசினோம், "அமைச்சரவை மாற்றம் என்பது முழுக்க முழுக்க மாண்புமிகு முதலமைச்சரின் பிரத்யேக உரிமை. அமைச்சரவை, இலாகா மாற்றம் தமிழக நலன் மற்றும் வளர்ச்சியை மையப்படுத்தியதே தவிர எந்த அரசியல் காரணங்களுக்கும் இடமில்லை.

**கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**

பி.டி.ஆர் ஆடியோ வெட்டி ஒட்டப்பட்ட ஒன்று, அது பொய் என அவரே தெளிவுபடுத்தியிருக்கிறார். அது மெய் என எவராவது நிரூபித்திருக்கின்றனரா... சரி ஒருவேளை பி.டி.ஆரின் ஆடியோவுக்காக இந்த நடவடிக்கை என்றால் அவர் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டிருப்பாரே... மாறாக தகவல் தொழில்நுட்பத்துறை வழங்கப்பட்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்துறைக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது, தமிழ்நாட்டில் தொழில்நுட்பத்துறையை வளர்த்திடவும் மேம்படுத்திடவும்தான் அவருக்குத் தகவல் தொழில்நுட்பத்துறை வழங்கப்பட்டிருக்கிறது. அதில் அவர் நல்ல அனுபவம் பெற்றவரும் கூட.

---

## <u>உலகப்புகழ்பெற்ற டிசைனர்.( Crisda Rodriguez)</u>

**உலகப்புகழ்பெற்ற டிசைனர்.( Crisda Rodriguez) சமீபத்தில் கேன்சரால் இறந்து போனார். அவர் கடைசியாக எழுதிய வார்த்தைகள்..**

1. மரணத்தை விட உண்மையானது இந்த உலகத்தில் எதுவுமே இல்லை. !
2. இந்த உலகத்தில் விலை உயர்ந்த பிராண்டட் கார் என்னுடைய கேரேஜில் நிற்கிறது. ஆனால் நான் சக்கரநாற்காலியில் அழைத்து செல்லப் படுகிறேன்.!
3. இந்த உலகத்தில் உள்ள அனைத்து வகையான டிசைன்களிலும் கலர் களிலும் விலை உயர்ந்த ஆடைகள் விலை உயர்ந்த காலணிகள் விலை உயர்ந்த பொருட்கள் அனைத்தும் என் வீட்டில் உள்ளது. ஆனால் நான் மருத்துவமனை வழங்கிய சிறிய கவுனில் இருக்கிறேன்.!
4. என் வங்கி கணக்கில் ஏராளமான பணம் கிடக்கிறது ஆனால் எதுவும் எனக்குப் பயன் இல்லையே.!!
5. என் வீடு அரண்மனை போன்று கோட்டை போன்று உள்ளது ஆனால் நான் மருத்துவமனையில் ஒரு சிறு படுக்கையில் கிடக்கிறேன்.
6. இந்த உலகத்தில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு நான் பயணித்துக் கொண்டே இருந்தேன். ஆனால் மருத்துவமனையில் உள்ள ஆய்வகங்களுக்கு மற்றொரு லேபிற்க்கும் மாற்றி மாற்றி அழைத்துச் செல்லப்படுகிறேன்.!
7. அன்று தினசரி 7 சிகை அலங்கார நிபுணர்கள் எனக்கு அலங்காரம் செய்வார்கள். ஆனால் இன்று என் தலையில் முடியே இல்லை...

8. உலகிலுள்ள பல வகையான உயர் நட்சத்திர ஓட்டல்கள் உணவுகளை உண்டு கொண்டிருந்தேன். ஆனால் இன்று பகலில் இரண்டு மாத்திரைகள் இரவில் ஒரு துளி உப்பு. !
9. தனியார் ஜெட்டில் உலகம் முழுவதும் பறந்து கொண்டிருந்தேன். ஆனால் இன்று மருத்துவமனை வராண்டாவிற்கு வருவதற்கு இரண்டு நபர்கள் உதவுகிறார்கள்....
10. எல்லா வசதி வாய்ப்புகளும் எனக்கு உதவவில்லை... எந்த விதத்திலும் ஆறுதல் தரவில்லை...ஆனால் சில அன்பானவர்களின் முகங்களும் அவர்களது தொழுதல்களும் என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. !

**இவ்வளவு தானுங்க வாழ்க்கை...**
**யாருக்கும் உதவாத... வெறும் பணம் பதவி அதிகாரம் என்று இருக்கும் மனிதர்களை மதிப்பதை தவிருங்கள்....**
**நல்ல மனித நேயமுள்ள மனிதர்களை நேசியுங்கள்.**

---

## நேர்மையானவர்கள் வாழ்வில் சில சம்பவங்கள்

### ஃபோர்டுக்குக் கிடைக்காத கார்

புகழ்ச்சியை விரும்பாதவர்களின் பெயர்கள் தாம் நாட்டில் இன்றளவும் நிலைத்து நின்று மக்களால் பேசப்படுகின்றன; வரலாற்றிலும் எழுதப்படுகின்றன. உலகில் உண்மையாய் உழைத்துப் புகழ் பெற்றவர்கள் அனைவருமே புகழ்ச்சியை விரும்பாதவர்கள் தாம்.

அவர்களில் ஒருவர் உலகப் புகழ் பெற்ற ஃபோர்டு. அவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். ஒரு சமயம் அவர் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றிருந்தார். அங்குபல இடங்களுக்குச் சென்று வர அவர் ரோல்ஸ் ராய்ஸ் காரைப் பயன் படுத்தினார்

அந்தக் காலத்தில் ஃபோர்டு கார்களைப் போல ரோல்ஸ் கார்களும் புகழ் பெற்றிருந்தன. ஆனாலும் ஃபோர்டு கார்களை விட ரோல்ஸ் ராய்ஸ் கார்கள் இரண்டாம் இடத்தில் இருந்தன. முதல் தரமான ஃபோர்டு கார்களைத் தயாரிக்கும் ஹென்றி ஃபோர்டு இரண்டாம் இடத்தில் இருக்கும் ரோல்ஸ் ராய்ஸ் காரில் பயணம் செய்கிறாரே என்று நினைத்துப் பெரிதும் வியந்தனர்.

ஒரு நாள் இரவு இங்கிலாந்து மன்னர் ஏற்பாடு செய்திருந்த விருந்தில் ஃபோர்டு கலந்து கொண்டார். அப்போது மன்னர் அவரைப் பார்த்து, “மிஸ்டர் ஃபோர்டு! நீங்கள் உங்கள் தயாரிப்பான ஃபோர்டு காரைப் பயன்படுத்தாமல், ரோல்ஸ் ராய்ஸ் காரைப் பயன்படுத்துகிறீர்களே. அதற்கு என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று கேட்டார்.

அதற்கு ஹென்றி ஃபோர்டு, “நிச்சயமாக அரசே! எனது சொந்த உபயோகத்திகாக ஒரு ஃபோர்டு கார் வேண்டுமென்று எனது மேனேஜரிடம் சொல்லியிருந்தேன். ஆனால், ஒவ்வொரு காரும் தயாராகி வெளியே வருவதற்கு முன்னரே விற்பனையாகிவிடுகிறது. எனது மேனேஜர் மிகவும் நேர்மையானவர். அவர் முதலில் வாடிக்கையாளர்களுக்குத் தான் விற்பனை செய்வார். அவர்களைத் திருப்திப் படுத்துவது தான் அவரது முதல் நோக்கம். அந்த சமயத்தில் முதலாளியே வந்து கேட்டால் கூட காரைத் தரமாட்டார். அதனால் தான் என் சொந்த உபயோகத்திற்குக் கூட இன்னும் ஃபோர்டு கார் கிடைக்கவில்லை. அதனால் தான் ரோல்ஸ் ராய்ஸ் காரைப் பயன்படுத்துகிறேன்” என்றார்

ஃபோர்டு கார் கம்பெனி மேனேஜரின் கடமை உண்ர்ச்சியையும் அவருக்கு செவிமடுத்து ஒரு சாதாரண மனிதன் போலவே நடந்து கொள்ளும் உரிமையாளர் ஃபோர்டையும் நினைத்துப் பெரிதும் வியந்தார் இங்கிலாந்து மன்னர்.

இப்படி ஒரு முதலாளியையும் மேனேஜரையும் இந்த உலகத்தில் வேறு எங்காவது பார்க்க முடியுமா?

## மல்யுத்த வீராங்கனைகள் மீதான அடக்குமுறை; நீதி கேட்டதால் `இந்தியாவின் மகள்களுக்கு' தண்டனையா?

**கு.சௌமியா(விகடன்)**

நாட்டுக்குப் பெருமை சேர்ந்த `இந்தியாவின் மகள்களுக்கு' இழைக்கப்பட்ட அநீதிக்கு அமைதி காத்து, அவர்களை மேலும் மேலும் அடக்குமுறை செய்யும், காயப்படுத்தும் காட்சிகள்தான் இந்தியாவின் முகமா? `பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ' போன்ற வார்த்தை ஜாலங்கள் எல்லாம் வெளுத்துப்போயுள்ளன. #VoiceOfAval

பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகும் பெண்கள் அது குறித்து புகார் தந்தால் என்னவாகும்? போராட்டம் நடத்தினால் என்ன விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்? அவர்கள் நாட்டுக்காகப் பதக்கம் பெற்றவர்களாகவே இருந்தாலும் நிலை இதுதான் என்று எடுத்துக்காட்டும் விதமாக நடந்தேறிக் கொண்டிருக்கின்றன, டெல்லியில் நியாயம் கேட்டுப் போராடிக்கொண்டிருக்கும் நம் மல்யுத்த வீராங்கனைகளுக்கு எதிரான அடக்குமுறைக் காட்சிகள்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும், பா.ஜ.க எம்.பி யுமான பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது ஒரு மைனர் சிறுமி உட்பட ஏழு மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் புகார் அளித்தனர். எந்த நடவடிக்கையும் இல்லை. ஜனவரி மாதம் சாக்ஷி மாலிக், பஜ்ரங் புனியா, வினேஷ் போகத் உள்ளிட்ட மல்யுத்த வீரர்கள் டெல்லி சாலையில் போராட்டத்தில் இறங்கினர். மத்திய அரசுக்கு அழுத்தம் ஏற்பட, விளையாட்டுத் துறை அமைச்சகம் குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் தலைமையில் விசாரணைக் குழுவை அமைத்தது. காவல்துறை பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது வழக்குப் பதிவு செய்தாலும், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



காவல்துறையால் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறை



சாஷி மாலிக்

பிரிஜ் பூஷன் சரண் சிங்கை கைது செய்யக்கோரி ஏப்ரல் 23 முதல் மல்யுத்த வீரர்கள் டெல்லியில் நடத்தி வரும் தொடர் போராட்டம் நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்தது. ஆனால், அரசியல், அதிகார வளையங்களுக்குள் இருந்த பிரிஜ் பூஷன் சிங்கை சட்ட நடவடிக்கை நெருங்கக்கூட இல்லை. இதுவரை அவரை கைது செய்யாததால், மே 28 அன்று புதிய நாடாளுமன்ற திறப்பு விழா நிகழ்ந்தபோது, முற்றுகையில் ஈடுபட்டனர் மல்யுத்த வீரர்கள். இவர்கள் மீது காவல்துறை கடுமையான தாக்குதலை மேற்கொண்டது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள், பெண்ணிய அமைப்புகளைச் சேர்ந்தோர் ஆகிய காவல்துறையால் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறையை விமர்சித்துள்ளனர். இவ்வளவுக்குப் பிறகும், சலனமின்றி இருக்கிறது மத்திய அரசு.

நாட்டுக்காக சர்வதேச அளவில் பதக்கங்களும் புகழும் பெற்றுத் தந்த இந்தியாவின் மகள்கள், தங்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிக்கு எதிராகப் போராடுகிறார்கள். குற்றவாளிகளைப் போல காவல்துறையால் கையாளப்படுகிறார்கள். ஜனநாயக ஆட்சி என்று சொல்லிக்கொள்ளும் நாட்டில் போராடுபவர்களின் குரல்கள் நசுக்கப்படுகின்றன. இந்த ஆணாதிக்கச் சமூகத்தில், பழிச் சொல்லுக்கு பயந்து, தங்களுக்கு நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக ஏற்கெனவே குரல் எழுப்பத் தயங்கும், அஞ்சும் பெண்களுக்கு, இந்தக் காட்சிகள் எல்லாம் அவர்களின் மிச்ச நம்பிக்கையையும் துணிவையும் வடியச் செய்துகொண்டிருக்கின்றன.

நீதிக்கான போராட்டத்தில் மக்கள் ஈடுபடுவதற்கான உரிமை அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கிறது. அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்கும் ஓர் அங்கம்தான் நாடாளுமன்றமும் அதன் பிரதிநிதிகளும். நாடாளுமன்ற திறப்பு விழாவின்போது

அரசியலமைப்பு கொடுத்த போராடும் உரிமையைப் பறித்து ஜனநாயகத்துக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளார் பிரதமர்.



வினேஷ் போகத்




இணையத்தில் வைரலாகும் புகைப்படம்

எல்லாவற்றுக்கும் மேலாக, காவல்துறை அடக்குமுறையால் கடுமையான மன அழுத்தத்தில் இருந்த மல்யுத்த வீரர்களின் புகைப்படங்களை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் சிரிப்பது போல் மார்ஃப் செய்து அவதூறு பரப்பிய சமூகக் கிருமிகளால், இந்நேரத்தில் அதிகக் கொதிப்பு ஏற்பட்டது.

இத்தனைக்குப் பிறகும், பாலியல் குற்றம் சாட்டப்பட்டுள்ள பா.ஜ.க எம்.பி மீது சட்ட நடவடிக்கைக்கு வழியில்லை. ஆனால், நீதி கேட்டுப் போராடிய மல்யுத்த வீரர்களை வலுக்கட்டாயமாக கைது செய்து அவர்கள் மீது வழக்கும் தொடுத்துள்ளது காவல்துறை. சர்வதேச அளவில் இந்தியாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தி யுள்ளது மத்திய அரசின் இந்த ஆணாதிக்க அகங்காரமும் பிடிவாதமும்.மல்யுத்த வீரர்கள் இந்தியாவுக்காகப் பதக்கம்

வென்றபோது உடன் புகைப்படம் எடுத்துக்கொண்ட பிரதமருக்கு, அவர்களின் நீதி கேட்கும் குரலும் கண்ணீரும் பொருட்டில்லாமல் இருக்கிறது. நாட்டுக்குப் பெருமை சேர்ந்த `இந்தியாவின் மகள்களுக்கு' இழைக்கப்பட்ட அநீதிக்கு அமைதி காத்து, அவர்களை மேலும் மேலும் அடக்குமுறை செய்யும், காயப்படுத்தும் காட்சிகள்தான் இந்தியாவின் முகமா? தேசப்பற்று என்பது நாட்டு மக்களின் நலனுக்கானது. அது பிரமாண்ட கட்டடங்களில் இல்லை. புதிய நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் செங்கோலால் இந்தியாவின் மகள்களை துன்புறுத்தி, நாட்டின் ஜனநாயக உரிமையையும் சாகடித்துள்ளது மத்திய அரசு. `பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ' போன்ற வார்த்தை ஜாலங்கள் எல்லாம் வெளுத்துப்போயுள்ளன.

சட்டமறியாத, சாதாரண நபர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டதாக புகார் வந்தால், உடனடியாக வளைத்துப் பிடிக்கும் போலீஸ், `தப்பியோடியபோது கை உடைந்துவிட்டது' என்று சொல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் அளவுக்குக் கொந்தளிக்கிறது. சமயங்களில், என்கவுன்டர் என்கிற பெயரில் சுட்டுக்கொல்லும் அளவுக்குக் ஆக்ரோஷம் கொள்கிறது. ஆனால், சட்டங்களை இயற்றக்கூடிய உயர்ந்த இடமான நாடாளு மன்றத்தில் நடமாடக்கூடிய ஓர் உறுப்பினர் மீதே புகார் வந்திருக்கிறது. பிரதமர் வரை மௌனித்துக் கிடக்கிறார்கள். உயரிய பதவியான குடியரசுத் தலைவர் பதவியில் அமர்ந்திருக்கும் பெண்ணான திரௌபதி முர்முவும் வாயைத் திறக்கவில்லை.

இது போன்ற குற்றச்செயலில் ஈடுபட்டதாக ஏதாவது ஒரு எதிர்க்கட்சிக்காரர் மீது புகார் எழுப்பப்பட்டால், ஓடோடி வந்து வீதியில் நின்று கூப்பாடு போடும் ஆளும் பி.ஜே.பி-யின் மகளிர் அணியினர் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. மகளிர் ஆணையத் தலைவி, உறுப்பினர் என்கிற பதவிகளையெல்லாம் வாங்கி வைத்துக்கொண்டு உலாவருபவர்களும் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை.

பாலியல் குற்றங்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட பெண்கள் நீதி கேட்டுப் போராடினால் கிடைப்பது மேலதிக தண்டனையாக இருப்பது... இந்தியாவுக்கு அவமானம்.

- **இது பெண்களின் வாதத்தை பொதுச் சமூகத்தின் முன் வைக்கும் `அவளின் குரல்'. பெண்கள் பிரச்னைகளின் பேசாபொருளை மக்கள் முன் எடுத்துவைப்பதற்கான அவள் விகடனின் முன்னெடுப்பு!**

## ஊழல் பேய்களின் பிடியில் ஆவின்... தாக்குப் பிடிப்பாரா வினீத் ஐ.ஏ.எஸ்?

ஜெயகுமார்.த VIKADAN

'ஆவின் அலுவலகத்தை ரோட்டிலிருந்து எட்டிப்பார்த்தால்கூடஏண்டா எட்டிப்பார்த்தே... எடு ஆயிரத்தை' என்று நம் பாக்கெட்டிலிருந்து பணத்தைப் புடுங்கும் அளவுக்கு லஞ்ச - ஊழல் பேய்களின் அட்டகாசம் தலைவிரித்தாடுகிறது.

ஆவின்... நமக்கெல்லாம் பால் பொழியும் நிறுவனம். அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பணம் பொழியும் நிறுவனம். அந்த நிறுவனத்தின் அலுவலகத்தை ரோட்டிலிருந்து எட்டிப்பார்த்தால்கூட, 'ஏண்டா எட்டிப்பார்த்தே... எடு ஆயிரத்தை' என்று நம் பாக்கெட்டிலிருந்து பணத்தைப் புடுங்கும் அளவுக்கு லஞ்ச - ஊழல் பேய்களின் அட்டகாசம் தலைவிரித்தாடுகிறது


வினீத் ஐ.ஏ.எஸ்


ஆவின் பால்

இது ஏதோ இப்போதைய தி.மு.க ஆட்சியில்தான் என்று நினைத்துவிடாதீர்கள். காலகாலமாகவே இப்படித்தான் கருணாநிதி, ஜெயலலிதா, ஓ.பி.எஸ், இ.பி.எஸ் என்று எல்லா காலகட்டங்களிலும் வெறியாட்டம் போடும் ஊழல் பேய்கள், இப்போதும் ஆட்டம் போடுகின்றன . அவ்வளவு தான்;

'உன்னால நான் கெட்டேன்... என்னால நீ கெட்டே' என்கிற மாதிரி பால் வளத்துறை அமைச்சர் நாசர் நீக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஆவின் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுப்பையன் ஐ.ஏ.எஸ்- ஸும் மாற்றப்பட்டுள்ளார். பால் வளத்துறைக்கு புதிய அமைச்சராக மனோ தங்கராஜ் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், புதிய நிர்வாக இயக்குநராக வினீத் ஐ.ஏ.எஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், ஊழல் பேய்களை அவர் எப்படி சமாளிக்கப்போகிறார் என்பது தான் மிகப்பெரிய கேள்வியாக பொங்கி நிற்கிறது

ஆவினைப் பொறுத்தவரை, அதன் நிர்வாகம்தான் மிகமிக முக்கியம். அதாவது, நிர்வாக இயக்குநரின் பணி என்பது ஆவினில் எப்போதுமே சவாலானது. ஊழல் பேய்கள் நிறைந்திருக்கும் ஆவின் நிர்வாகத்தில், அனைத்தையும் சமாளித்து முன்னேற்றப்பாதையில் நிறுவனத்தை நடத்திச் செல்வது என்பது பெரும்சவாலான விஷயமே!

குறைந்துவரும் பால் கொள்முதல்; பால் பற்றாக்குறையைச் சமாளிக்க, மகாராஷ்டிராவிலிருந்து பால் பவுடர் வாங்குதல்; நேரத்துக்கு பால் விநியோகம் செய்தல்; பால் முகவர்களுக்கு நியாயமான கமிஷன்; 27 பால் யூனியன்களை மேலாண்மை செய்தல்; பால் விவசாயிகளை சந்தித்தல்; 9,600 பால் சொசைட்டிகளை கண்காணித்தல்; அதிகரித்து வரும் தனியார் நிறுவனங்களின் பால் கொள்முதல்; புதிதாக பால் கொள்முதலிலும், சந்தையிலும் களம் இறங்கியிருக்கும் அமுல்... இப்படி ஆவின் சமாளிக்க வேண்டிய பிரச்னைகள் வரிசை கட்டி நிற்கின்றன.

'இந்தப் பொறுப்புகளுக்கு ஏற்ப அனுபவம் வாய்ந்த, திறம்பட செயல்படக்கூடிய ஒருவரை நிர்வாக இயக்குநராக நியமித்திருக்க வேண்டும். ஆனால், வினீத் ஐ.ஏ.எஸ் அடிப்படையில் எம்.பி.பி.எஸ் படித்த மருத்துவர். கேரள மாநிலம், காசர்கோட்டைச் சேர்ந்தவர். இதற்கு முன் பழநி சப்கலெக்டர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இணை நிர்வாக இயக்குநர், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் என 9 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர். ஆனால், ஆவினை சமாளிக்க இது மட்டுமே போதாது' என்று ஆவின் தொடர்புடைய இடங்களிலும், பால் கூட்டுறவு சங்க பிரதிநிதிகளிடமும் பரபரக்கப்படுகிறது.

ஏற்கெனவே ஆண்டுக்கு சுமார் 400 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஆவினை தூக்கி நிறுத்துவது அவ்வளவு சாதாரணமான விஷயமில்ல. நேரடியாகவும், மறைமுகமாகவும் 10 லட்சம் பேர் ஆவினை நம்பியிருக்கிறார்கள். தற்போது, அமுல் நிறுவனம் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் பால் கொள்முதல் செய்ய களம் இறங்கியுள்ளது. ஆவினுக்கு தினமும் 38 லட்சம் லிட்டர் பால் தேவை. தற்போது 29 லட்சம் லிட்டர் பால்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. மீதி 9 லட்சம் லிட்டர் பாலை மகாராஷ்டிராவிலிருந்து பால் பவுடர் வாங்கிதான் சமாளித்து வருகிறார்கள்.

அமுல் களத்தில் இறங்கினால், பால் கொள்முதல் மேலும் குறையும். ஏற்கெனவே தமிழகத்தில் பால் கொள்முதல் செய்து வரும் ஹட்சன், டோட்லா, மில்க்கி மிஸ்ட், ஆரோக்கியா உள்ளிட்ட தனியார் நிறுவனங்களைச் சமாளிக்கவே முடியாமல் ஆவின் தடுமாறிக் கொண்டிருக்கும் சூழலில், அமுல் நிறுவனத்தை எப்படி சமாளிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்நிலையில்தான், வினீத் ஐ.ஏ.எஸ் குறித்து கவலை பொங்கப் பேசிக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு பால் முகவர்கள் நல சங்கத்தின் தலைவர் பொன்னுசாமியிடம் இதுகுறித்து கேட்டபோது, "பால்வளத் துறையில் ஆணையர், நிர்வாக இயக்குநர் என்ற இரு பொறுப்புகளும் மிகவும் முக்கியமானது. ஆணையர் பதவிக்கு நீண்ட நாட்களாக யாரும் நியமிக்கப்படவில்லை. அடிக்கடி கோரிக்கை எழுப்பியும் அந்த இடத்தை நிரப்பாமலே வைத்துள்ளனர்.

ஏற்கெனவே இருந்த நிர்வாக இயக்குநர் சுப்பையன்... பால் விற்பனை, பால் கொள்முதல் இரண்டையும் பார்த்து வந்தார். ஒரு கட்டத்தில், ஆவின் ஊழல் மற்றும் குளறுபடிகள் காரணமாக அமைச்சருடன் சேர்த்து அவரும் தூக்கியடிக்க பட்டுவிட்டார். இப்போது இளைஞரான வினீத் ஐ.ஏ.எஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர், ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தினாலொழிய, ஆவினுக்கு விடிவில்லை. ஆவினைப் புரிந்துகொள்வது மட்டுமல்ல, அதில் களையெடுக்க வேண்டிய விஷயங்களும் உள்ளன. ஆனால், அது அத்தனை சாதாரணமானதல்ல.

`இதுவரை அனுபவமிக்கவர்களையே இந்தப் பதவிக்கு அமர்த்தியிருக்கின்றனர். அவர்களாலேயே சமாளிக்க முடியாததை இளைஞராக இருக்கும் வினீத் எப்படி சமாளிக்க போகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்" என்றார்.

சேலம் மாவட்டம், ஆத்தூரைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர் ஜெயக்குமாரிடம் பேசியபோது, "ஆவின் முழுக்க அரசியல் மயப்படுத்துப்பட்டுள்ளது. ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்துக்கும் தலைவர், ஒன்றியத்துக்கான தலைவர், இணையத்துக்கான தலைவர் என அனைத்துப் பதவிகளுக்கும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வழங்கப்படுகின்றன. ஆவின், சேவை அமைப்போ, பொதுத்துறை நிறுவனமோ கிடையாது. இதுவொரு கூட்டுறவு அமைப்பு. சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் சொந்தமானது. ஆனால், அதிகாரம் செலுத்துபவர்கள் அனைவரும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான். இவர்களை கட்டுப்படுத்தவோ, களையெடுக்கவோ முதல்வரால்கூட முடியாத விஷயம்" என்று நொந்துபோனவராகச் சொன்னார்.

**பார்ப்போம்... வினீத் தாக்குப் பிடிக்கிறாரா என்று!**

---

## <u>குழுக்களும், குழப்பங்களும் எதனால்?</u>

***-அஜித கேச கம்பளன்*** **June 2, 2023(Aram Online)**

எடுத்ததற்கெல்லாம் குழு அமைப்பது, அதற்கு தகுதியற்ற தலைவர்களைப் போடுவது, கெளவத்திற்காக சிலரை உறுப்பினராகப் போடுவது, குழு செயல்படுவதற்குத் தோதான சூழ்நிலைமைகளை உருவாக்கத் தவறுவது, அதில் திடீரென ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் தலையிட்டு அதிகாரம் செய்வது... இதற்கு தீர்வு தானென்ன?








தமிழ் நாட்டிற்கென தனித்துவமான புதிய கல்விக் கொள்கையை உருவாக்கிட ஒரு குழு நீதிபதி த.முருகேசன் தலைமையில் அமைக்கப்பட்டது! கல்விசார் பாடத் திட்டங்கள் தொடர்பாக எந்த அடிப்படை அறிவுமற்ற இது போன்ற நீதிபதிகளை தலைவராக போட்டதும், அந்தக் குழுவில் உள்ள சர்வதேச கல்வி அனுபவமிக்க கல்வியாளர் ஜவகர் நேசன்

ஓராண்டுகள் தீவிரமாக செயல்பட்ட நிலையில் வெளியேறியதும் சில நாட்களுக்கு முன்பு தமிழகத்தில் பெரும் விவாதப் பொருளானது.

இந்தப் பின்னணியில் முன்னாள் சிறப்புத் தலைமைப் பொறியாளரும், தமிழ்நாடு பொதுப்பணித் துறை மூத்தபொறியாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளருமான பொறிஞர்.முனைவர். **அ.வீரப்பன்** அவர்கள் தமிழக முதல்வருக்கும், தலைமைச் செயலாளருக்கும் எழுதியுள்ள இந்தக் கடிதம் முக்கியத்துவம் பெறுகிறது. இது போன்ற குழுக்களை எவ்விதம் அமைப்பது, செயற்படுத்துவது என்பது குறித்து நடைமுறை சார்ந்த நவீன புரிதலுடன் செயல்பட, கீழ்க் காணும் யோசனைகள் பரிசிலிக்கதக்கவை;




*முனைவர் அ.வீரப்பன்*



*மூத்த பொறியாளர்*

**தொழில் நுட்பஉயர்நிலைக் குழுக்கள் அமைப்பதில் அணுகுமுறைமாற்றம் உடனடித் தேவை;**

இன்றைக்கு பழைய நடைமுறை பயனில்லை, தமிழக அரசு – அவ்வப்போது – தமிழ்நாட்டில் ஏற்படும் – அரசை மக்களை – ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயத்தைப் பாதித்திடும் சிக்கல்களில் சிறந்த தீர்வுகாண – உயர்நிலைக் குழுக்களை – (பொறியியல் தொழில்நுட்பம், உயர்கல்வி, தொழில் வளர்ச்சி, வெள்ளத் தடுப்பு, காலநிலைமாற்றம், தமிழகக் கல்விக் கொள்கை உருவாக்கம் போன்ற இன்றியமையாத பொருள்களில்) அமைக்கின்றது - நல்லநோக்கத்துடன்.

- ஆனால் இவ்வுயர்நிலைக் குழுக்கள் கீழ் குறிப்பிடும் குறைபாடுகள், போதாமைகள் உள்ளவையாக உள்ளன.
- இவை அனைத்தும் பழைய ஆங்கிலேய ஆட்சி முறையின் நீட்சியாக – விதி முறைகளைக் கொண்டவையாகக் கட்டமைக்கப்படுகின்றன.
- பெரும்பாலும் நேரடிப் பங்களிக்காத – நேரப் பற்றாக்குறையுள்ள – துறைத் தலைமைகள், நிர்வாக மேலாண்மையாளர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுதல், வெறும் பெயருக்கெனவும் சிலரை நியமித்தல்.
- கலந்துரையாடல் விவாதங்களில் – துறைசார் வல்லுநர்களின் கருத்துரைகளுக்கு முன்னுரிமை தரப்படாமல் – அமைச்சர்கள், அய்.ஏ.எஸ் அதிகாரிகளின் அழுத்தம் – தலையீடுகள் – இவ்வுயர்நிலைக் குழுக்களின் நோக்கத்தைத் திசை திருப்பும் நடவடிக்கைகளாகும்.
- குழுக்களின் ஆய்வு அறிக்கைகள், தலையாய பரிந்துரைகள் எவையும் கமுக்கமாகவே வைக்கப்படுதல். வெளிப்படைத் தன்மையுடன் பொதுவெளியில் – இணையதளங்களில் கூட உடனுக்குடன் வெளியிடப்படாமை வருத்ததிற்குரியதாகும்.

அரசு ஒப்புக் கொள்ளும் பரிந்துரைகள் கூட ஒருங்கிணைந்து செயற்படுத்தப்படாமல் – அங்கொன்றும், இங்கொன்றுமாக கால இடைவெளிகளில் முழுமையாகச் செயற்படுத்தப்படாமல் போகின்றன!

பெரும்பாலான நிகழ்வுகளில் 'அவுட் சோர்சிங்' முறையில் பன்னாட்டு வணிக நிறுவனங்களிடம் ஒப்படைத்து – திட்டச் செலவுகளைப் பன்மடங்குக் கூடுதலாகச் செய்து மறைமுகலாபம் பார்த்தல் மிகத் தவறான அணுகுமுறையாகும்.

எனவே, இக் குறைபாடுகளையும் போதாமைகளையும் நீக்கிட -தமிழக மக்களுக்கும், தொடர்புடைய தமிழ்ச் சமுதாயத்திற்கும், தேவைப்படும் பயனான திட்டங்களைக் காலதாமமின்றி நிறைவேற்றிடத் தமிழக முதல்வர் மற்றும் தமிழகஅரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரின் மேலானகவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அமைக்கப்படும்

உயர்நிலை தொழில்நுட்பக் குழுக்களின் நோக்கம் – செயல் திட்டமுன்னீடுகள் – அவற்றைச் செயற்படுத்தும் வழிமுறைகள் பற்றிய விளக்க அறிக்கை இணைக்கப்பட வேண்டும்.

எதிர் கொள்ளும் சிக்கல் – கொள்கைத் தெளிவு – துறைசார் திறமையும் பட்டறிவும் தமிழ்ச் சமுதாயஅக்கறையும் உடைய வல்லுநர்களையே இவ்வுயர்நிலைக் குழுவின் தலைவராக நியமித்திடவேண்டும். பழைய ஆங்கிலேய ஆட்சிமுறையை அப்படியே கடைபிடித்து – **உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதியையோ அல்லது அரசு ஐ.ஏ.எஸ் அதிகாரிகளைக் குழுத் தலைவராக நியமித்தல் எந்த உருப்படியான நல் விளைவையும் தராது.** இது இன்று பதவியில் இருக்கும் தலைமைச் செயலாளருக்கும் பொருந்தும்.

உயர்நிலைக் குழு உறுப்பினர்களாக – தலைமைச் செயலக ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் – துறைசார் தலைமைப் பொறுப்பாளர்கள் முதலியோரைநியமித்திடக் கூடாது. பதிலாகநேரமும் ஆர்வமும் திறமையும் கொண்ட இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை பொறுப்பளார்களை நியமித்திட வேண்டும்.

அவ்வாறே வெளியிலிருந்து திறமையும், களப்பட்டறிவும், தமிழ்ச் சமுதாய அக்கறையும் பங்களிக்கும் ஆர்வமுள்ள துறைசார் வல்லுநர்களை (4 அல்லது 5 பேர்களுக்கு மிகாமல்) உயர்நிலைக் குழுவில் சேர்த்திட வேண்டும். தமிழ்ச் சமுதாயத்திற்குக் கடந்த 25ஆண்டுகளில் எந்தவிதப் பெரும் பங்களிக்காதவர்களைக் கண்டிப்பாகச் சேர்க்கக் கூடாது, வெறும் பெயருக்காக.

இவ்வுயர்நிலைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் 3 மாத இடைக்கால அறிக்கை மற்றும் 6 மாத நிறைவறிக்கையினை (எழுத்து மூலம்) அளித்திட வலியுறுத்த வேண்டும். இடைக்காலத்தில் குழுத் தலைவரோடு நேரிடையாகவோ, தொலைபேசி வாயிலாகவோ கலந்துரையாடவும் வாய்ப்பளிக்க வேண்டும். காலக்கெடு (3 மாதம் ஃ 6 மாதம்) நிறைவடைந்ததும் – உயர்நிலைக் குழுத் தலைவர் – அனைத்து உறுப்பினர்களும் கலந்துரையாடி – தேவையானவிளக்கங்கள் கூடுதல் அறிக்கைகள் பெற்று – ஒரு மாதகாலத்தில் அறிக்கையை நிறைவு செய்து அரசிடம் அளித்திட வேண்டும்.

அந்த நிறைவறிக்கை, அரசு மூலமாக அதே நாளில் செய்தியறிவிப்பாகவும் இணையதள இணைப்பாகவும் – பொதுவெளியில் தரப்படவேண்டும். இதற்கெனத் தலைமைச் செயலக அளவில் உட்குழு அமைப்பது, காலந்தாழ்த்திக் கிடப்பில் போடுவது கூடாது. இது உயர்நிலைக் குழுவின் உழைப்பை வீணடிப்பது, ஐஏஎஸ் ஆதிக்க மனப்பான்மை உடையது, அனுமதிக்கக் கூடாது (சட்டமன்றத்தில் வைப்பது எல்லாம் பழைய ஆதிக்க நடைமுறையே. அப்படி விதிமுறை இருந்தால் இது உடனடியாக நீக்கப்பட வேண்டும்.)

பொது வெளியிலிருந்து கற்றறிந்த தமிழ்ச் சமுதாய அக்கறையுடையவர்கள் அனுப்பும் பயனுள்ள கருத்துரைகளையும் அறிக்கையின் பின்னிணைப்பாகச் சேர்த்தளிக்கலாம். நிலைக் குழுவின் பரிந்துரைகளை – அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து – ஒப்புக் கொள்ளப்பட்டவைகளை உடனடியாகச் செயற்படுத்த உரியநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இவையே மக்களாட்சிக்கு – ஏற்ற நடைமுறை என வலியுறுத்துகிறோம் என தெரிவித்துள்ளார், அ.வீரப்பன்.

---

## <u>கோழி முட்டைகளில் கோடிக் கோடியாய் கொள்ளை!</u>

***-சாவித்திரி கண்ணன்***

**May 7, 2023 (அறம் இணைய இதழ்)**

**ஏழைக் குழந்தைகளின் பெயரால் திமுக ஆட்சியாளர்கள் சத்துணவு திட்டத்தில் தினசரி வழங்கப்படும் 80 லட்சம் முட்டைகளில் நாளொன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் ஆதாயமடைகின்றனர்! அதிமுக, திமுக, பாஜக..என எல்லா கட்சிகளுக்கும் ஒரே கார்ப்பரேட் நிறுவனமே ரட்சகராகவுள்ளது.!**

சத்துணவுத் முட்டை திட்டமானது தமிழகம் முழுவதும் உள்ள அரசுப்பள்ளிகள், உள்ளாட்சி பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலம் மற்றும் உண்டு உறைவிடப்பள்ளிகள், தேசிய தொழிலாளர் திட்டப் பள்ளிகள் ஆகியவற்றில் மாணவர்களுக்கு

செயல்படுத்தப்படுவதால் தினசரி சுமார் 80 லட்சம் முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி மாநில மற்றும் மத்திய அரசுகளால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சத்துணவு திட்டத்தை 1982ல் மீண்டும் எம்.ஜி.ஆர் புதுப்பித்த போது, முட்டை வழங்கப்படவில்லை. அந்த வகையில் 1989 ஆம் ஆண்டு கருணாநிதி முதலமைச்சராக வந்த போது தான் இரண்டு வாரத்திற்கு ஒரு முட்டை சத்துணவில் வழங்கப்படும் என அறிவித்தார். பிறகு 2006 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது, வாரம் இரு முட்டை, பிறகு வாரத்திற்கு மூன்று முட்டை என அதிகப்படுத்தப்பட்டு, 2010 தொடங்கி வாரத்தின் ஐந்து நாட்களும் 2 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவோடு முட்டை என அறிவிக்கப்பட்டது! இந்த காலகட்டங்களில் சத்துணவுக்கு முட்டைகள் வாங்குவதில் கருணாநிதி ஆட்சியில் ஊழல் நடைபெறவில்லை. அந்தந்த மாவட்டங்களிலேயே கொள்முதல் செய்தனர். டெண்டரில் விலை குறைவாக குறிப்பிட்டவர்களுக்கு ஆர்டர்கள் தரப்பட்டன.

2011க்கு பிறகு அதிமுக ஆட்சியில் தான், சத்துணவு திட்ட முட்டைகள் கொள்முதலில் ஊழல் தலை தூக்கியது. ஊழல் செய்வதற்காகவே மிகப் பெரிய திமிங்கில வியாபாரிகள் மட்டுமே கலந்து கொள்ளத்தக்க அளவில் டெண்டர் விதிகள் மாற்றி அமைக்கப்பட்டு, ஒரே நிறுவனம் மட்டுமே மொத்த முட்டைகளையும் விநியோகம் செய்ய வைத்தனர்.

அந்த வகையில் தனக்கென ஒரு கோழிப் பண்ணை கூட இல்லாத கிறிஸ்டி என்ற நிறுவனமே மொத்த முட்டை சப்ளைக்கும் பொறுப்பு ஏற்றது! அவர்கள் மொத்த கொள்முதலில் சந்தையில் முட்டை விலை ரூ 3.30க்கு கிடைத்த போது அரசுக்கு ரூ 4.61 க்கு கொடுத்தனர். இந்த வகையில் அன்றைய தினம் தினசரி 69 லட்சம் முட்டைகள் வாங்கப்பட்ட நிலையில் ஒரு முட்டையில் மட்டுமே அதிமுக ஆட்சியாளர்கள் எவ்வளவு ஆதாயம் பார்த்தனர் என அறியலாம்.







அப்போது இது வெளியே தெரிய வந்த போது ''முட்டையில் ஊழல் செய்ததன் மூலம் ஏழை பள்ளிக் குழந்தைகள் வயிற்றில் அடித்து ஊழல் செய்யவும் அதிமுக அரசு தயங்காது என்பது தெரிய வருகிறது" என கனிமொழி கூறினார். 2018 நவம்பர் மாதம் கிறிஸ்டி நிறுவனம் சம்பந்தப்பட்ட 70 இடங்களில் மத்திய அரசின் வருமான வரித்துறை சோதனைகள் நடந்தன! இதையடுத்து "கிறிஸ்டி நிறுவனத்தின் ஆட்டம் ஓய்ந்தது" என எல்லோரும் நினைத்தனர். ஆனால், கிறிஸ்டி நிறுவனம் தான் பாஜக ஆட்சி செய்த கர்நாடகத்திலும் சில ஆர்டர் பெற்றது. அதிமுக ஆட்சி மீண்டும் கிறிஸ்டி நிறுவனத்திற்கே ஆர்டர் தந்தது. அதே முறைகேடுகள் தொடர்ந்தன.


அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இதே நிறுவனமே ஆர்டர் பெற்று இயங்கியதன் பின்னணியில், மத்திய பாஜக ஆட்சியாளர்களின் ஆசீர்வாதமும் இந்த நிறுவனத்திற்கு கிடைத்துவிட்டது என வணிகர்கள் தரப்பில் பேசப்பட்டது. அப்போது ஸ்டாலின், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஏழைக் குழந்தைகள் பெயரில் கொள்ளையடிக்கும் இந்த ஊழல்வாதிகளை கண்டிப்பாக தண்டிப்போம்" என்றார்.

ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த பிறகும் இதே நிறுவனத்தின் பினாமி நிறுவனமான சுவர்ணபூமி எண்டர்பிரைசஸுக்கே மீண்டும் முட்டை வழங்கும் ஆர்டர்கள் தரப்பட்டன. "அந்த நிறுவனத்தின் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை" என சமூக நலத்துறை அமைச்சர் **கீதா**

**ஜீவன்** நற்சான்றிதழ் தந்தார். இந்த நிறுவனத்திற்கு மீண்டும் ஆர்டர்கள் வழங்கப்பட்ட வகையில் மத்திய பாஜகவின் அனுசரணைகளும் இருந்ததாக அதிகாரமட்டத்தில் சொல்லப்பட்டது.










அந்த வகையில் தற்போது மொத்த சந்தையில் ரூ 4.40 பைசாவிற்கு முட்டைகள் கிடைக்கின்றன. வழக்கமாக நாம் கடைகளில் வாங்கும் முட்டைகள் சுமார் 55 கிராம் எடை கொண்டவை! ஆனால், சத்துணவுக்கு சப்ளை செய்யப்படும் முட்டைகள் வெறும் 40 கிராம் தொடங்கி 45 கிராம் வரையுள்ள சிறிய முட்டைகளாகவுள்ளன! எனவே, இந்த சிறிய முட்டைகளின் ஒரிஜினல் விலை ரூ 3.90 தான்!

ஆனால், தமிழக அரசு இந்த சிறிய முட்டைகளை 2021-2022 ஆண்டில் ரூ 5.52 லிருந்து ரூ 5.82 பைசா வரை வாங்குவதாக தகவல் அறியும் உரிமைசட்டம் மூலம் தெரிய வந்துள்ளது ! 2022 தொடங்கி தற்போது அங்கன்வாடி மையங்களுக்கு வாங்கப்படும் முட்டைகளின் கொள் முதல் விலையோ ரூ 4.79 முதல் 4.94 வரை என தெரிய வந்துள்ளது. ஆக, நாளொன்றுக்கு தற்போது 80 லட்சம் முட்டை வாங்கப்படும் நிலையில், இதில் தினசரி எவ்வளவு ஆதாயம் ஆளும் தரப்பில் அடைகிறார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இவை தவிர, மொத்தமாக ஒரே நிறுவனம் ஆட்கள் வைத்து சப்ளை செய்வதால், எல்லா முட்டைகளிலும் சீல் அடிப்பதில்லை. சீல் அடிக்காத சுமார் 15 லட்சம் முட்டைகள் வெளிமார்க்கெட்டில் விற்கப்பட்டுவிடுகின்றன. இதனால் ரொம்ப உள்ளடங்கிய கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கான முட்டைகள் வெளிமார்க்கெட்டில் விற்கப்படுகின்றன. இதில் பல *தரப்பினர் ஆதாயம் அடைகின்றனர்.*

ஒரே கார்ப்பரேட் நிறுவனம் அதிமுக, திமுக, பாஜக என அனைத்து தரப்பிலும் நம்பிக்கை பெற்று ஊழலை மிக சாதுரியமாகவும்,சௌகரியமாகவும் செய்கின்றது. ஆக, தற்போதெல்லாம் ஊழல் செய்வதில் எல்லோரும் ஒருவருக்கொருவர் மறைமுக கூட்டாளிகளாகத் தான் உள்ளனர்.




## கண்ணீர் அஞ்சலி

**நமது ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் ஆரம்ப காலம் முதல் நீண்ட காலம் பொதுச் செயளாளராக இருந்து இயக்கத்தை வழி நடத்திசென்ற திரு எஸ் எம் அரசு அவர்கள், விண்ணுலலகத்தை அடைந்தது ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது.**

**இவர் பொதுப்பணிதுறையின் முன்னாள் தலைமைப் பொறியாளராகவும், மக்கள் நல்வாழ்வு கட்சியின் தலைவராகவும் இருந்துள்ளார்.**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நமது இயக்கத்தின் சார்பாக இறைவனைப் பிரார்த்திகிறோம்**

## இயக்கத்தில் இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்

## 2023-24இல் இணைந்தவர்களின் ஆண்டு உறுப்பினர்கள் பெயர் மற்றும் முகவரி

| | | |
|---|---|---|
| **திரு M.சுப்ரமணியன்<br>15,மேட்டு தெரு<br>எடையூர் அஞ்சல்<br>விருதாசலம்-606302<br>தொ.எண்:8098542344** | **திரு D.இளவரசன்<br>15.06.1967<br>1/204,வீரபத்திரன்<br>கோயில் தெரு,<br>எடையூர் அஞ்சல்<br>விருதாசலம்-606302<br>தொ.எண்:6380675779** | **திரு V.குமரகுருபரன்<br>20.10.1971<br>14/1எ,நாச்சியார்பேட் ரோடு<br>விருதாசலம்- 606001<br>தொ.எண்:7639977084** |
| **திரு E.சேகர்<br>08.07.1965<br>372/3,இளங்கோ தெரு<br>சக்தி நகர்<br>விருதாசலம்-606001<br>தொ.எண்:9443248985** | **திரு கோ.திருவரசன்<br>01.05.1959<br>64,வடக்கு தெரு<br>சிருவாப்பூர் கிராமம்<br>பெரியகோட்டு முனா<br>விருதாசலம்-606103<br>தொ.எண்:9442557451** | **திரு P.பூமாலை<br>09.08.1960<br>97,சேலம் மெயின் ரோடு,<br>ராமசந்திரன் பேட்டை,<br>விருதாசலம்<br>தொ.எ.ண்:6380517079** |
| **திரு N.அஷ்வின் ராஜ்<br>20.05.1983<br>தாழநல்லூர்,தீவளூர் PO,<br>திட்டக்குடி,<br>கடலூர்-606110<br>தொ.எண்:8056851729** | **திரு P.ராமகிருஷ்ணன்<br>106,பாரதி நகர்,<br>K.K.ரோடு,<br>விருதாசலம்<br>தொ.எண்:9443538899** | **திரு அ.பெருமாள்<br>15.07.1955<br>20/21,3வது தெரு,<br>தாஷ்கண்ட் நகர்,<br>விருதசலம்-<br>தொ.எண்:9994947745** |
| **திரு G.துளசிநாதன்<br>24.01.1963<br>73,திலகர் வீதி,<br>வடக்கு பெரியார் நகர்<br>விருதாசலம்<br>தொ.எண்:8754835400** | **திரு சீனிவாசன்<br>1அ,பழனியாண்டி தெரு,<br>நேருஜி நகர்,<br>அரியமங்கலம்,<br>திருச்சி-620010<br>தொ.எண்:7448798756** | **திரு பெ.பெரியசாமி<br>05.05.1965<br>279/6,ஆபிசர் டவுன்<br>எழில் நகர்,<br>கைலாசபுரம்,<br>திருச்சி-620014<br>தொ எண்:9944074225** |
| **திருமதி R.முத்தமிழ் செல்வி<br>1925A,L-II 120 அடி<br>இரட்டை சாலை,<br>பெட்ரோல் புங்க் எதிரில்,<br>நாவல் பட்டு, அன்னா நகர்<br>திருச்சி-620026<br>Ph-9578561618** | | |

## ஆயுள் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **L.M. 585**<br>**திரு K. அனந்தன்**<br>NO.94, அம்பேத்கர் தெரு<br>அசோக் நகர்<br>ராணிப்பேட்டைT -<br>631001 (PH.9443417381) | **L.M. 586**<br>**திரு A. தசரதன்**<br>NO.33/33, பெரிய தெரு,<br>தண்டலம்<br>கும்பின்பேட்டைPOST,<br>அரக்கோனம்<br>ராணிப்பேட்டை<br>DT, (PH.9655782272) | |

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

அரசு விதிமுறை மீறி தனி நபருக்கு பட்டா வழங்கிய விவகாரம்

# ஓய்வு பெறும் நாளில் பெண் தாசில்தார் அதிரடி சஸ்பெண்ட்

**கலசப்பாக்கத்தில் பரபரப்பு**

திருவண்ணாமலை ஜூன் 2: கலசப்பாக்கத்தில் அரசு விதிமுறை மீறி தனி நபருக்கு பட்டா வழங்கிய விவகாரம் தொடர்பாக ஓய்வு பெறும் நாளில் பெண் தாசில்தார் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் தாலுகா சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தாராக பணிபுரிந்தவர் மலர்கொடி (60). இவர் நேற்று முன்தினம் பணி ஓய்வு பெற இருந்தார். இந்நிலையில், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் மலர்கொடி அதிரடியாக தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, தண்டராம்பட்டு தாசில்தாராக மலர்கொடி பணியாற்றியுள்ளார். அப்போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு அரசுக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்திற்கு தனி நபர் பெயரில் பட்டா வழங்கியதாக கூறப்படுகிறது. ஆனால், அரசு வருவாய்த்துறை நிலப்பதிவேடுகள் கணக்கில் அதை பதிவு செய்யவில்லை.

இந்நிலையில், சமீபத்தில் தண்டராம்பட்டு தாலுகாவில் நடந்த ஜமாபந்தியில், கலெக்டர் முருகேஷ் கலந்து கொண்டார். அப்போது அரசு இடத்தை தனது பெயருக்கு பட்டா பெற்ற நபர், கலெக்டரிடம் மனு அளித்துள்ளார். அதில், அரசு வழங்கிய நிலத்தை முறையாக வருவாய் துறை கணக்கில் பதிவு செய்து தருமாறு குறிப்பிட்டுள்ளார்.

மனுவைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த கலெக்டர், சட்டப்படி தனி நபருக்கு பட்டா வழங்க முடியாத இடத்தை, எவ்வாறு அதிகாரிகள் வழங்கினர் என விசாரணை நடத்தினார்.

அப்போது, தாசில்தாராக மலர்கொடி பணியாற்றிய காலத்தில், பட்டா வழங்கியது தெரியவந்தது. அதன் அடிப்படையில், தாசில்தார் மலர்கொடியை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கை எடுத்திருப்பதாக வருவாய் துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.

மேலும், விதிமுறை மீறி பட்டா வழங்கியது தொடர்பாக விசாரணை நடந்துவரும் நிலையில் இந்த நடவடிக்கையை அவசர அவசியம் கருதி எடுத்து இருப்பதாகவும், முறையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.

ஆனாலும், பணி ஓய்வு பெறும் நாளில் சஸ்பெண்ட் நடவடிக்கை தவிர்த்து, வேறு வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கலாம் என வருவாய் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் தெரிவித்துள்ளனர்.

# VAO gets 3-year jail for taking ₹1,000 bribe to give relief fund

TIMES NEWS NETWORK

Chennai: A Tiruvallur special court on Thursday sentenced a Village Administrative Officer to three years imprisonment for demanding and collecting a bribe of ₹1,000 from a woman to release a relief fund.

Karpagam, who is a resident of Karlambakkam near Pallipattu in Tiruvallur district and whose husband Bhandam passed away in 2010, applied for relief to be paid under a government scheme.

Later, her relative Sonasundaram approached Karlambakkam VAO Vijayaraghavapillai who demanded ₹1,000 to release the fund. Sonasundaram lodged a complaint with the DVAC at Kancheepuram.

A trap was laid and as instructed by DVAC, Sonasundaram on June 7, 2010, gave ₹1,000 to Vijayaraghavapillai before the sleuths rushed in and caught him in the act.

Chief judicial magistrate R Velaras found the VAO guilty on two counts and sentenced him to three years in jail for each count. But the sentence will run concurrently.

**நாமக்கல் 11-5-2023**

# வாடிக்கையாளருக்கு ரூ.50 ஆயிரம் இழப்பீடு வங்கிக்கு நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவு

**நாமக்கல், மே 11-**

'வங்கியின் சேவை குறைபாடால், வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் சிரமத்துக்கு, 50 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்' என, 'இந்தியன் ஓவர்சீஸ் வங்கி' கிளைக்கு, நாமக்கல் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், கவுண்டம்பாளையத்தை சேர்ந்தவர் செங்கோட்டையன், 63; இவர், 'இந்தியன் ஓவர்சீஸ் வங்கி', குருக்கபுரம் கிளையில், 2016, ஜூலையில், 5,000 ரூபாய், 'பிக்சட் டிபாசிட்' செய்துள்ளார். அதே கிளையில், அவர் வெவ்வேறு நாட்களில், 17 'பிக்சட் டிபாசிட்' செய்துள்ளார். அவற்றுக்கு கொடுத்த விண்ணப்பங்களில், 'டிபாசிட்' முதிர்ச்சியடையும் போது, தொடர்ந்து மீண்டும் புதுப்பித்துக்கொள்ளுமாறு வங்கிக்கு தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வங்கி நிர்வாகம் செய்யாததால், இதுகுறித்து வங்கி மேலாளரிடம் கேட்டுள்ளார். அப்போது, இணையதளத்தில் புதுப்பிக்கப்படாமல் விட்டதால் மீண்டும் புதிதாக, 'டிபாசிட்' செய்ய கேட்டுக்கொண்டுள்ளார். இடைவெளி விட்டு, 'டிபாசிட்' செய்தால் வட்டி இழப்பு ஏற்படும் எனக் கூறி, அதற்கு வாடிக்கையாளர் ஒப்புக்கொள்ளவில்லை.

அதனால், செங்கோட்டையன், தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் கோரி, 2022, ஜூனில், நாமக்கல் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி ராமராஜ் தலைமையிலான அமர்வு, 'வங்கியின் வாடிக்கையாளர் எழுத்துப்பூர்வமாக வேண்டுகோள் எதுவும் வழங்காத நிலையில், 'டிபாசிட்' தொகைகள் முதிர்ச்சியடையும் போது, தொடர்ந்து புதுப்பித்துக்கொள்ளும் வசதியை ரத்து செய்தது சேவை குறைபாடே. வங்கியின் சேவை குறைபாட்டால் வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் சிரமங்களுக்கு, வங்கி நிர்வாகம், 50 ஆயிரம் ரூபாய் இழப்பீடாக, நான்கு வாரத்துக்குள் வழங்க வேண்டும்' என, நீதிபதி உத்தரவிட்டார்.

தினமணி திருச்சி 3

## லஞ்சம்: தொழிலாளர் நலத்துறை உதவி ஆய்வாளர் கைது



**திருச்சி, மே 3:** திருச்சியில் ரூ. 15 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தொழிலாளர் நலத்துறை உதவி ஆய்வாளரை லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் புதன்கிழமை கைது செய்தனர்.

திருச்சி ஸ்ரீரங்கத்தை சேர்ந்தவர் நாதன் மகன் மனோகரன் (37). இவர் திருச்சி கண்டோன்மென்ட்டிலுள்ள பிரபல தொழில் நிறுவனம் உள்ளிட்ட சில தனியார் நிறுவனங்களுக்கு தொழிலாளர் சட்ட ஆலோசகராக உள்ளார்.

இந்நிலையில் கடந்த மார்ச் 15 ஆம் தேதி திருச்சியில் தொழிலாளர் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வரும் சேலம் மேட்டூரைச் சேர்ந்த கார்த்திக் (30) என்பவர் மனோகரன் பணியாற்றி வரும் கண்டோன்மென்ட் தனியார் தொழில் நிறுவனத்தை ஆய்வு செய்து, ஆவணங்கள் முறையாக இல்லை எனக் கூறி எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளார். அதன்பேரில் ஆலோசகர் மனோகரன் அந்த நிறுவனத்தில் பராமரிக்கப்பட்ட ஆவண நகல்களை கார்த்திக்கிடம் கொடுத்தபோது அவர் ரூ. 15 ஆயிரம் லஞ்சம் கொடுத்தால் உங்களது நிறுவனத்துக்கு பிரச்னை இல்லாமல் பார்த்துக் கொள்கிறேன் எனக் கூறினாராம்.

ஆனால் பணம் கொடுக்க விரும்பாத மனோகரன் இதுகுறித்து திருச்சி லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸாரிடம் புகார் அளித்தார்.

இதையடுத்து போலீஸாரின் ஆலோசனையின்பேரில் தொழிலாளர் நலத்துறை உதவி ஆய்வாளர் கார்த்திக்கிடம் மனோகரன் ரூ. 15,000-ஐ புதன்கிழமை வழங்கினார். அப்போது அங்கு மறைந்திருந்த டிஎஸ்பி மணிகண்டன் தலைமையிலான லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் கார்த்திக்கை கைது செய்து விசாரிக்கின்றனர்.

தினத்தந்தி

சாதகமாக தீர்ப்பு வழங்க

## ரூ.5 லட்சம் லஞ்சம் வாங்கிய மாஜிஸ்திரேட்டு கைது

சில்வாசா, மே.25-

குஜராத் மாநிலம் வல்சாட் மாவட்டம் உமர்காவ் தாலுகாவை சேர்ந்த ஒருவர் நிலப்பிரச்சினை தொடர்பாக உமர்காவ் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் ரூ.5 லட்சம் லஞ்சம் தந்தால் சாதகமான தீர்ப்பு வழங்குவதாக புகார்தாரரிடம் மாஜிஸ்திரேட்டு அமித் ஜனக்பாய் தெரிவித்து உள்ளார். பணம் கொடுக்க விரும்பாத சம்பந்தப்பட்ட நபர் சம்பவம் குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார்.



அமித் ஜனக்பாய்

இதையடுத்து லஞ்ச ஒழிப்பு போலீசார் யோசனைப்படி ரூ.5 லட்சத்தை மாஜிஸ்திரேட்டை சந்தித்து கொடுத்து உள்ளார். அப்போது அங்கு மறைந்து இருந்து கண்காணித்த லஞ்ச ஒழிப்பு போலீசார் லஞ்சப்பணம் வாங்கிய மாஜிஸ்திரேட்டை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். இவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

3-5-2023

நுகர்வோர் நீதிமன்ற தீர்ப்புகளை நிறைவேற்றாத

## வங்கி மேலாளர்கள் உள்பட 33 பேருக்கு 'பிடிவாரண்ட்'

### 4 வாரத்திற்குள் கைது செய்ய போலீசுக்கு உத்தரவு

நாமக்கல் மே 3: நுகர்வோர் கோர்ட் தீர்ப்புகளை நிறைவேற்றாத வங்கி நிர்வாக இயக்குனர், கிளை மேலாளர்கள் உள்ளிட்ட 33 பேருக்கு பிடிவாரண்ட் பிறப்பித்து நாமக்கல் நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை நிறைவேற்றாத நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு 72 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நிலுவையில் இருந்த இந்த அனைத்து மனுக்களும் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நாமக்கல் நுகர்வோர் நீதிமன்றத்தில் கடந்த 2005ம் ஆண்டு முதல் கடந்த ஆண்டு வரை தாக்கலான 34 வழக்குகளில் மேல்முறையீடு நிலுவையில் இருப்பதாக பணம் செலுத்த வேண்டியவர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்குகளை விசாரிக்க இடைக்கால தடை ஏதேனும் மேல்முறையீட்டில் விதிக்கப்பட்டுள்ளதா என்பதை ஒரு வார காலத்திற்குள் பிரமாண பத்திரமாக பணம் செலுத்த வேண்டியவர்கள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டும். இல்லையெனில், பணம் செலுத்த வேண்டியவர்கள் மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படமாட்டாது என்றும், 2012ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை தாக்கலான 8 வழக்குகளில் பதில் உரை தாக்கல் செய்யவும், விசாரணை நடத்தவும் இறுதியாக 4 வாரம் அவகாசம் வழங்கி நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

2006ம் ஆண்டு முதல் கடந்த ஆண்டு வரை தாக்கலான 18 வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட பிடிவாரண்டுகள் காலாவதியான நிலையிலும் வழக்கு தாக்கல் செய்தவர்கள் பிடிவாரண்டுகளை அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளாத நிலையிலும் இருந்தன.

இந்த வழக்குகளை விசாரித்த நுகர்வோர் நீதிமன்றம் வழக்குகளில் பணம் செலுத்த வேண்டியவர்களாக உள்ள அரசுடைமையாக்கப்பட்ட வங்கி நிர்வாக இயக்குனர், அந்த வங்கியின் கபிலர்மலை கிளை மேலாளர், மற்றொரு வங்கியின் நாமக்கல் கிளை மேலாளர், தனியார் கூரியர் நிறுவனங்களின் 3 மேலாளர்கள், 8 தனியார் நிறுவன உரிமையாளர்கள், நாமக்கல்லில் உள்ள 5 தனியார் கடைகளின் உரிமையாளர்கள் உட்பட 24 பேருக்கும், புதியதாக 7 வழக்குகளில் பணம் செலுத்த வேண்டியவர்களாக உள்ள வங்கியின் சங்ககிரி மேற்கு கிளை, கோவை ராம்நகர் கிளை மேலாளர்களுக்கும், நாமக்கல்லில் உள்ள யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி முதுநிலை மேலாளர் உட்பட 9 பேருக்கும், நீதிபதி டாக்டர் ராமராஜ் நேற்று பிடிவாரண்ட் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள வழக்குகளில், புகார்தாரர்கள் பிடிவாரண்டுகளை அனுப்ப தேவையான மனுவை, ஒரு வார காலத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும். இல்லையெனில், அவர்களது வழக்கு தள்ளுபடி செய்யப்படும் என நீதிபதி உத்தரவிட்டார். மேலும், பிடிவாரண்ட் கிடைக்கப்பெற்ற பின்னர் சம்பந்தப்பட்ட காவல் நிலைய இன்ஸ்பெக்டர்கள் 4 வார காலத்திற்குள் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய வேண்டும். தவறினால், கைது செய்ய முடியாமல் போனதுக்கான காரணங்களை விளக்கி பிடிவாரண்டை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என கூறியுள்ளார்.

புதுக்கோட்டை அருகே

## ஓய்வுபெறும் நாளன்று பிடிஓ சஸ்பெண்ட்



▶ குமரன்

பொன்னமராவதி, ஜூன் 2: புதுக்கோட்டை அருகே ஒன்றிய ஆணையர் பணி ஓய்வு பெறும் நாளன்று சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் கிராம ஊராட்சி ஒன்றிய ஆணையராக பணியாற்றியவர் குமரன்(58). நேற்றுமுன்தினம் பணி ஓய்வு பெற இருந்த இவர், பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கனவே பணியாற்றிய போது பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்டத்தில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகார் தொடர்பான விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் இதுபோன்ற பணியிடை நீக்கம் இதுவே முதல் முறை என அதிகாரிகள் தெரிவித்தனர்.



▪ திருப்பூர் மாவட்டம், அவிநாசி அருகே அரசு பள்ளிக்குள் கள்ளச்சாராயம் காய்ச்சியோர், போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

## அரசு பள்ளியில் சாராயம் காய்ச்சிய பெண்கள் உட்பட 5 திமுகவினர் கைது

**அவிநாசி, மே 28-**

அவிநாசி அருகே அரசு பள்ளி வளாகத்தில், சாராயம் காய்ச்சிய இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

திருப்பூர் மாவட்டம், கருமாபாளையம் ஊராட்சி, செம்பாக்கவுண்டம் பாளையத்தில் உள்ள, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகத்தில், கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக அவிநாசி மதுவிலக்கு பிரிவு இன்ஸ்பெக்டர் முரளிக்கு தகவல் கிடைத்தது.

அங்கு எஸ்.ஐ.,க்கள் சர்வேஸ்வரன், ஜெகதீசன் உள்ளிட்ட போலீசார், நேற்று அதிகாலை 2:00 மணிக்கு திடீர் ரெய்டு நடத்தினர். பள்ளி கழிப்பறை அருகே, சிலர் காஸ் அடுப்பில் கள்ளச்சாராயம் காய்ச்சி கொண்டிருந்தனர்.

அதே பகுதியை சேர்ந்த சீனிவாசன் 55, ஆறுச்சாமி, 65, விக்னேஸ்வரன், 28, காயத்ரி, 23, சரசாள், 45 என்பது தெரிய வந்தது; இவர்கள் கைது செய்யப்பட்டனர். 10 லிட்டர் சாராயம், 50 லிட்டர் ஊறல் பறிமுதல் செய்யப்பட்டது.

கைதான ஆண்கள் திருப்பூர் சிறையிலும், பெண்கள் கோவை மத்திய சிறையிலும் அடைக்கப்பட்டனர்

**2 பெண்கள் கைது**

திருச்சி, ராம்ஜி நகர் பகுதியில் சாராயம் விற்கப்படுவதாக, மாநகர மதுவிலக்கு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. நேற்று முன்தினம் இரவு, போலீசார் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, ராம்ஜி நகர் மில் காலனி பகுதியில், ஒரு வீட்டில் சாராயம் காய்ச்சி விற்பது தெரிந்தது. 3 லிட்டர் சாராயம், 165 லிட்டர் ஊறலை பறிமுதல் செய்தனர். சாராயம் காய்ச்சி விற்றதாக, விமலாதேவி, 50; ஜீவிதா, 35, ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- ஜுன் 2023

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச் செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 June 2023
Due to corona published online)

**என்றும் சான்றோர்**
**சான்றோர் பாலர் ஆப;**
**சாலார் சாலார் பாலர் ஆகுபவே!**

பெறுநர்

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

**Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI** and published through online on its behalf of **Thiru Govindasamy** (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai -600023 and printed by **Thiru G Parthasarathy at VPS PRINTERS**, No 292, TH Road, Chennai-600005; Editor: **Thiru V.Karthikai Rajan (8778312823)**

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!